தமிழக முதல்வர்

# கலைஞர் அவர்களின்

## சுதந்திரத் திருநாள் உரை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்

15–8–2000 அன்று

சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில்

தேசியக்கொடியை ஏற்றிவைத்து, ஆற்றும்

சுதந்திரத் திருநாள் உரை.

# இந்திய சுதந்திரத் திருநாள்

பேரன்பு கொண்ட பெரியோர்களே!

அருமைத் தாய்மார்களே!

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே!

இன்று நமது இந்தியத் திருநாட்டின் சுதந்திரத் திருநாள்.

சுதந்திரம் அடைந்த பிறகு, நமது நாடு பல்வேறு துறைகளிலும் பாராட்டத்தக்க வகையில் முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. தமிழகமும் இந்தியாவில் உள்ள இதர மாநிலங்கள் எல்லாம் பாராட்டும் வகையில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது.

உலக நாடுகளும் பாராட்டும் வகையில் மேலும்மேலும் பல முன்னேற்றங்களைக்

காண்பதற்கு ஏற்ப, நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து உழைத்திட வேண்டும் என்னும் உணர்வினை நமக்கு அளிக்கின்ற நாள் இந்தச் சுதந்திரத் திருநாள்.

இந்த அரசு 1996ஆம் ஆண்டில் நான்காவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகு, உருவாக்கப்பட்ட புதிய திட்டங்கள் பல.

அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்கு அளித்திடும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்",

ஊர் முன்னேற்றத்தில் ஒவ்வொருவரும் பங்கேற்றிட வேண்டும் எனும் உணர்வை வளர்த்திடும் "நமக்கு நாமே திட்டம்",

மக்கள் மனம் மகிழும் வண்ணம் மக்கள் பிரதிநிதிகள் தொண்டாற்றிட வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத, இந்த மாநிலத்தில்

மட்டுமே "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்",

துள்ளித் திரியும் பள்ளி மாணவர்க்கும் அறிவை அள்ளித்தரும் கணினிக்கல்வித் திட்டம்,

கந்துவட்டி கட்டி மனம் வெந்துவிட்ட மகளிர் பயன்பெற சேமிப்புடன் இணைந்த சிறுவணிகக் கடன் திட்டம்,

சிற்றூர் மக்களுக்கும் பயனளிக்கும் "மினி பஸ்" எனும் "சிற்றுந்துத் திட்டம்",

சமத்துவச் சிந்தனையை மக்களிடையே வளர்த்திடும் "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்",

உழுவோரும், நுகர்வோரும் பயனடைய "உழவர் சந்தை திட்டம்",

வந்தபின் தவிப்பதை விட, வருமுன் காப்போம் எனும் சிந்தனையைத் தந்து செயல்பட வைத்திடும் "வருமுன் காப்போம் திட்டம்",

மேழிச் செல்வங்களை மேம்படுத்த "கால்நடை மேம்பாட்டுத் திட்டம்",

மாணவர்களிடம் உடல்நலம் ஓம்பும் உணர்வினை பள்ளிப்பருவம் முதல் வளர்த்திடும் "வாழ்வொளித் திட்டம்",

அடிக்கடி தீ விபத்துகளுக்கு ஆளாகி அல்லல்படும் ஏழைக் குடிசைவாழ் மக்களுக்கு கல்நார் கூரையுடன் வீடுகள் அமைக்கும் திட்டம்,

கிராமப்புறக் கைவினைக் கலைஞர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை

வாய்ப்புகளை அதிகரித்திட “பூமாலை விற்பனை மையம்”,

கிராமப்புற மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் “மகளிர் திட்டம்” – எனப் புதிய பல திட்டங்கள் நான்காண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கப்பட்டுள்ளன.

நிர்வாக வசதிகளை மேம்படுத்திட தேனி, திருவள்ளூர், நாமக்கல், திருவாரூர் என புதிய மாவட்டங்கள் உருவாக்கம். அரியலூரிலும் புது மாவட்டம் அமைத்திட நடவடிக்கைகள்.

திண்டுக்கல், தூத்துக்குடி, சென்னை, விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், தேனி ஆகிய

10 மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள்,

உயர்கல்வி வசதிகளை பெருக்கிட "உயர்கல்வித்துறை",

கடுஞ்சாலைகளைக் கால்படும் சாலை களாக மேம்படுத்திட "நெடுஞ்சாலைத்துறை",

இளைஞர்களின் நலம் வளர்த்திட "இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை",

தமிழ் மொழியின் பயன்பாட்டைப் பெருக்கிட "தமிழ் ஆட்சி மொழித்துறை",

தகவல் தொழில் நுட்பத்தில் தமிழகம் சிகரத்தைத் தொட "தகவல் தொழில் நுட்பவியல் துறை",

சமதர்ம சமுதாயம் உருவாக உழைத்திட வேண்டும் என்னும் உணர்வினை வழங்கி வழிகாட்டிட "சமூகச் சீர்திருத்தத்துறை",

பழங்குடியின மக்களைச் செழுங்குடியின மக்களாக மாற்றிட "பழங்குடியினர் நலத்துறை" எனப் பல்வேறு புதிய துறைகள் உருவாக்கப்பட்டுத் துறைதோறும் தமிழகம் பிறை போல வளர்ந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளன.

தொழில் நட்புறவுக் கொள்கையுடன் கூடிய வெளிப்படையான அணுகுமுறை, திறந்த நிர்வாகம், ஊழலற்ற ஆட்சி என்பதை இந்த அரசு கொள்கையாகக் கொண்டதால்,

**1995**இல் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழகம் தற்போது இந்தியாவிலேயே முதலிடம்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியுள்ளதில் தமிழகம் முதலிடம்.

உயர்கல்வி வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

கார்கில் போராட்டத்தின் போது தேசிய பாதுகாப்பு நிதிக்கு அதிக நிதி வழங்கியதில் தமிழகம் முதலிடம்.

தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

**1996** ஏப்ரலில் தமிழகத்தில் **34** மென்பொருள் நிறுவனங்கள்; தற்போது **600**க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள்.

1995–96இல் தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட மென்பொருள்களின் ஏற்றுமதி மதிப்பு 37 கோடி ரூபாய்; 1999–2000இல் 1914 கோடி ரூபாய்.

மென்பொருள் வல்லுநர்கள் எண்ணிக்கை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகம்.

மென்பொருள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே என "நாஸ்காம்" அமைப்பின் ஆய்வு பறைசாற்றியுள்ளது.

4.7.2000 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களால் திறக்கப்பட்ட "டைடல் பார்க்" தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சீரிய சான்றாகத் திகழ்கிறது.

குழந்தைகள் நலன்காக்க போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் முதல் இடம்.

எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதல் இடம்.

மண்ணில் மகிழ்ச்சி நிலைத்திட மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதல் இடம்.

சிசு மரணம் தேசிய சராசரி **72;** தமிழகத்திலோ **53** மட்டுமே!

பிறப்பு விகிதம் தேசிய சராசரி **26.5;** தமிழகத்தின் சாதனை **19.2.**

❖ அரிசி உற்பத்தித் திறன்

❖ எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறன்

ஆகியவற்றில் தமிழகம் இந்தியாவில் முதலிடம்.

❖ கரும்பு உற்பத்தித் திறனில் இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே தமிழகம் முதலிடம்.

தமிழக போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டுதோறும் வழங்கும் 10 விருதுகளில் 1997இல் 7 விருதுகளையும், 1998–99இல் 5 விருதுகளையும் பெற்றுப் பெருமை கண்டுள்ளது தமிழகம்.

தேசிய அளவில் உள்ள மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்புக் குழு வழங்கும் விருதுகளில் 9 விருதுகளைக் கடந்த ஆண்டில் பெற்றுள்ளது தமிழகம்.

1996க்குப் பின் 740 கோடி ரூபாய் செலவில் 475 பாலங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டதில் இதுவரை 204 கோடியே 68 இலட்ச ரூபாய் செலவில் 179 பாலங்கள்

கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 535 கோடியே 32 இலட்ச ரூபாய் செலவில் 296 பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னையில் 10 புதிய மேம்பாலங்கள் 115 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டதில் இதுவரை 7 பாலங்கள் எழிலுடன் அமைக்கப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன.

நேப்பியர் பாலம் 5 கோடியே 11 இலட்ச ரூபாய் செலவில் அழகுடன் விரிவுபடுத்தப் பட்டுள்ள பாங்கினைப் பாராட்டாதவர் எவருமில்லை.

4 ஆண்டுகளில் 20,900 கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகள், தார்ச்சாலைகளாக மாற்றம்;

10 ஆயிரம் கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகளும்,

1787 கிலோ மீட்டர் நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகளும்,

3469 கிலோ மீட்டர் நீள மாநிலச் சாலைகளும் அதிகரிக்கப்பட்டு சாலை வசதிகள் மேம்பாட்டில் தமிழகம் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தியாவில் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 15 இலட்சம்.

தமிழகத்தில் மட்டும் கட்டப்பட்டுள்ள வீடுகள் 9 இலட்சத்து 89 ஆயிரம்.

நெசவாளர் துயர் துடைக்க கைத்தறி துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 30 விழுக்காடு தள்ளுபடி;

60 வயதடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை 100/– ரூபாய்

என்பது 1997–98இல் 150/– ரூபாயாகவும், நடப்பு ஆண்டில் 200/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

60 வயதுக்குமுன் மரணம் எய்திடும் நெசவாளரின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1996–97இல் 15,000/– ரூபாய் என்பது படிப்படியாக உயர்த்தப்பட்டு, நடப்பு ஆண்டில் 50,000/– ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியில் இல்லாத 25 இலட்சம் தொழிலாளர் பயன்பெற தனி தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.

தையல் தொழிலாளர் நலவாரியம்,

ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியம்,

முடிதிருத்துவோர் நலவாரியம்

சலவைத் தொழிலாளர் நலவாரியம்

கைவினைத் தொழிலாளர் நல வாரியம்

பனைமரத் தொழிலாளர் நல வாரியம்

– எனப் பல்வகைத் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் தனித்தனித் தொழிலாளர் நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையில் நான்கு ஆண்டுகளாக 90 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்; 12 ஆயிரம் குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்.

நகராட்சி நிர்வாகத் துறையில் 1 இலட்சத்து 50 ஆயிரம் புது தெரு விளக்குகள்; 90 ஆயிரம் குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்

என தமிழகத்தையே ஒளி மயமாக்கிட நாம் உன்னத முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

ஆதிதிராவிடர்களுக்கு 3 இலட்சம் இலவச கான்கிரீட் வீடுகள்;

மீனவர்களுக்கு 20,000 வீடுகள்;

158 கோடி ரூபாய் செலவில் பாசனப் பகுதிகளில் தூர்வாரும் பணிகள்;

சொந்தக் கட்டடங்கள் இல்லாத 653 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 52 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள்;

கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தொழிற்கல்வி நிறுவனங்களில் 15 சதவீத இடஒதுக்கீடு;

பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களில் இருந்து ஒவ்வொருவகைத் தொழிற் கல்விப்

பிரிவிலும் சேரும் முதல் பத்துநிலை மாணவர்களின் பட்டப்படிப்பு செலவு முழுவதையும் அரசு ஏற்றல்;

10, 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ மாணவியரின் உயர்கல்விச் செலவை அரசு ஏற்றல் என்பன உட்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தொடக்கப்பள்ளி முதல் தொழில்நுட்பக் கல்லூரிகள் வரை அனைத்திலுமே முந்தைய காலகட்டங்களைவிடக் கூடுதலாக கல்வி நிறுவனங்களைத் தமிழகம் முழுவதிலும் பரவலாக உருவாக்கி, மாணவ மாணவியர் அதிக எண்ணிக்கையில் சேர்ந்து பயில வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழகப் பொறியியல் கல்லூரிகளில் 1995–96இல் மாணவர்களுக்கு இருந்த இடங்களின் எண்ணிக்கை 20,170 மட்டுமே.

இந்த இடங்களை 48,000 என உயர்த்தியுள்ளமை ஒன்றே, இந்த அரசு கல்வித் துறையில் ஏற்படுத்தி வரும் சாதனைகளுக்கு ஒரு மிகச்சிறந்த சான்றாகும்.

வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு மூப்பு அடிப்படையில் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் உட்பட மொத்தம் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பல்வேறு வகை ஆசிரியர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு;

மூவலூர் மூதாட்டியார் திட்டத்தில்மட்டும் 2 இலட்சத்து, ஆயிரத்து 733 ஏழைப் பெண்களுக்கு 10,000/– ரூபாய் வீதம்,

மொத்தம் 201 கோடியே 73 இலட்சத்து 30ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி;

மகளிர் திட்டத்தின்மூலம் 34 ஆயிரத்து 25 சுய உதவிக் குழுக்கள்; அவற்றில் 6 இலட்சத்து 10 ஆயிரத்து 335 மகளிர் உறுப்பினர்கள்;

மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 13 ஆயிரத்து 644 மகளிர்க்கு கடன் உதவி;

உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு; அதன் மூலம் 44 ஆயிரத்து 143 பெண்களுக்கு உள்ளாட்சி மன்றங்களில் பதவி;

பெண்கள் நலத்திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும், "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்".

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களையும், சாதனைகளையும் தொடர்ந்து படைப்பதன் மூலம் தமிழகம் இந்தியாவின் இதர மாநிலங்களும், மத்திய அரசும் போற்றும் வகையில் பல்வேறு பெருமைகளைக் குவித்து வருகிறது.

மொழி உணர்வு வளர, இலக்கிய நலம் மிளிர "குறள் பீடம்" எனும் அமைப்பு;

உருதுமொழி ஆய்வுக்கும், வளர்ச்சிக்கும் தனியாக உருது அகாடமி;

வான்புகழ் அய்யன் வள்ளுவர்க்கு விண்முட்டும் சிலை;

ஆன்றோர்களுக்கும் சான்றோர்களுக்கும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், மொழிப் போர் தியாகிகளுக்கும் மரியாதை செலுத்திடும்வண்ணம் இவ்வரசு அமைத்த

மணிமண்டபங்கள், நினைவிடங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்கள் கணக்கிலடங்கா!

சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி, வாழ்ந்துவரும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 1500 ரூபாய் என்பது 3000 ரூபாய் ஆகவும்,

அவர்களின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 750 ரூபாய் என்பது 1500 ரூபாய் எனவும் உயர்வு;

இப்படி, தியாகச்சுடர்களுக்கு சிறப்புகள் செய்து வருவதுடன், தமிழக மக்களின் வளமான முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றி, தமிழகத்திற்குப் பெருமைகளைக் குவித்து வருகிறது இந்த அரசு.

இத்தகைய பெருமைகள் தொடர்ந்திட – சாதனைகள் பெருகிட – ஜனநாயக மாண்புகள் செழித்திட – பொய்மைகள் நீங்கிட – வாய்மையே வெல்லும் என்னும் தத்துவம் நிலைத்திட – என்றும் விழிப்புடன் செயல்படுவோம் என இந்த வீர சுதந்திரத் திருநாளில் அனைவரும் உறுதியேற்போமாக!

நமது சுதந்திரத்திற்காகப் போராடி, உயிர் தந்தோர், உடல் ஊனமுற்றோர், உடைமைகளைத் துறந்தோர், சிறைக் கோட்டங்களில் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி நலிந்தோர், நாடு கடத்தப்பட்டோர் என்ற வரிசையில் தியாக மணிகளாய் வரலாற்றில் விளங்கிடும் ஆயிரமாயிரம் தியாகச் சுடர்களுக்கு இந்நாளில் நமது வீரவணக்கங்களைச் செலுத்திடுவோம்.

தமிழக மக்கள் அனைவர்க்கும் என் உளமார்ந்த சுதந்திரதின நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

வணக்கம்.

தமிழரசு அச்சகம், சென்னை–600 002.